www.agaram.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි ]
முழுப் பதிப்புரிமையுடையது ]
All Rights Reserved]

**බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - කොළඹ අධ්‍යාපන කලාපය**
**மேல் மாகாணக் கல்வித் திணைக்களம் - கொழும்பு கல்வி வலயம்**
**Western Provincial Education Department - Colombo Educational Zone**

**දෙවන වාර ඇගයීම - 2018**
**இரண்டாம் தவணை மதிப்பீடு - 2018**
**Second Term Evaluation - 2018**

| | | |
|---|---|---|
| 11 ශ්‍රේණිය<br>தரம் 11<br>Grade 11 | ව්‍යාපාර සහ ගිණුම් අධ්‍යයන I පත්‍රය<br>வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் வினாத்தாள்-I<br>Business & Accounting Studies Paper I | පැය එකයි<br>ஒரு மணித்தியாலம்<br>One Hour |

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**

✻ இலக்கம் 01 தொடக்கம் 40 வரையிலான வினாக்களுள் 1, 2, 3, 4 ஆகிய விடைகளில் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

- கீழ்வரும் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு 1, 2, 3,4 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்குக.

"20 வருட இராணுவ சேவையில் இருந்து விலகிய கேர்ணல் அமித் 'இராஜாலிய' என்ற பெயரில் பாதுகாப்பு சேவை நிறுவனம் ஒன்றை நடாத்திச் செல்கின்றார். மிகவும் பிரபல்யமான இந்த நிறுவனம் உயர் அந்தஸ்துள்ளவர்களுக்கான (VIP's) பாதுகாப்பு சேவையினைப் பூர்த்தி செய்கின்றது."

01. கேர்ணல் அமித்தின் நிறுவனம் ஆற்றும் சேவையின் தேவை யாது?
1. உணவு  2. பாதுகாப்பு  3. பொழுதுபோக்கு  4. கல்வி

02. இராஜாலிய பாதுகாப்பு நிறுவனம் உள்ளடக்கப்படுவது,
1. பொருள் உற்பத்தி வியாபாரம்  2. சேவை வழங்கும் வியாபாரம்
3. தர்மஸ்தாபனம்  4. கல்வி நிறுவனம்

03. கேர்ணல் அமித் தன்னுடைய வியாபாரத்தை நடாத்திச் செல்வதற்கு உறுதுணையாக அமைவது,
1. உடல் வலிமை  2. இராணுவ சேவையில் இருந்தமை
3. மக்களின் நம்பிக்கையைப் பெற்றிருந்தமை  4. போதிய மூலதனம் காணப்பட்டமை

04. A பகுதிக்கு மிகவும் பொருத்தமான விடையை B பகுதியில் இருந்து தெரிவு செய்க.

| A | B |
|---|---|
| 1. சங்க வகை அமைப்பு | E - அரச வணிக முயற்சி |
| 2. கூட்டுறவு | F - பதிவு செய்யப்படுவது கட்டாயமானது |
| 3. பொதுக்கம்பனி | G - சமூக நலன்புரி நோக்குடைய அமைப்பு |
| 4. அரச கூட்டுத்தாபனம் | H - ஜனநாயக முறையில் செயற்படும் சுயேட்சை அமைப்பு |

1. HEGF  2. FHEG  3. GHFE  4. EFHG

05. சில்லறை வியாபாரம் மற்றும் மொத்த வியாபாரத்தில் காணக்கூடிய விசேட லட்சணங்கள் ஆவது,
1. பொருள் விற்பனை  2. வியாபாரக்கழிவு வழங்கள்
3. ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம்  4. காவிச்சென்று விற்போர்

06. கீழ்வரும் கணக்கு வகைகளில் வணிக வங்கி மூலமாக நடைமுறைப்படுத்தப்படும் கணக்குகளை உள்ளடக்கியது,
1. சேமிப்புக்கணக்கு, முதலீட்டுக்கணக்கு, வனிதா வாசனா கணக்கு
2. சிரேஸ்ட பிரஜைகள் கணக்கு, சேமிப்புக்கணக்கு
3. சேமிப்புக்கணக்கு, நிலையான வைப்புக்கணக்கு, நடைமுறைக் கணக்கு
4. நிலையான வைப்புக்கணக்கு, நடைமுறைக்கணக்கு, சிறிலிய கணக்கு

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

07. காசோலை தொடர்பான குறுக்குக் கோடிடல் முறைகள் இரண்டும் வருமாறு,
1. சாதாரண குறுக்குக்கோடிடல், அசாதாரண குறுக்குக்கோடிடல்
2. பொதுமுறைக் குறுக்குக்கோடிடல், விசேடமுறைக் குறுக்குக்கோடிடல்
3. பொதுமுறைக் குறுக்குக்கோடிடல், புறக்குறிப்பிடல்
4. புறக்குறிப்பிடல், சாதாரண குறுக்குக்கோடிடல்

08. காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றில் தொடர்புபடுகின்ற தரப்பினர்கள் சகல தகவல்களையும் வெளிப்படுத்துவதற்கு அவசியமான காப்புறுதித்தத்துவம்,
1. பங்களிப்புத் தத்துவம்
2. இழப்பீட்டுத் தத்துவம்
3. உச்சநன்னம்பிக்கைத் தத்துவம்
4. அண்மைக்காரணித் தத்துவம்

09. தொடர்பாடல் செயற்பாட்டின் பிரதான மூலகங்களுள் துலங்கள் என்பதனைக் குறிப்பது,
1. அனுப்புபவரால் பெற்றுத் தரப்படும் தகவல்.
2. தகவலைப் பெற்றுத்தரும் நபர்.
3. தகவலைப் பெற்றவர் தகவல் தொடர்பாக செயற்படும் முறை.
4. தகவல் அனுப்புபவர் தகவல் தொடர்பாக செயற்படும் முறை.

10. அதிபரால் ஒலிபெருக்கி மூலமாக ஆசிரியர்களுக்கு விசேட கலந்துரையாடல் ஒன்றிற்காக அழைப்பு விடுக்கப்பட்டது. இது,
1. வாய்மொழி மூலமான தொடர்பாடல்
2. உள்ளக சமிக்ஞை தொடர்பாடல்
3. உள்ளக இலத்திரனியல் தொடர்பாடல்
4. குறியீடுகள் மூலமான தொடர்பாடல்

11. தற்போதைய சந்தைக்கு கணினி மூலமாக அறிமுகப்படுத்தப்பட்ட விசேட அம்சமாவது,
1. மின்னஞ்சல்
2. இணையத்தளம்
3. இலத்திரனியல் வர்த்தகம்
4. இலத்திரனியல் வங்கிச்சேவை

12. பெருந்தெருப் போக்குவரத்திலே இலங்கையில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் முறையாக அமைவது,
1. சுரங்கப் பாதைகளை நிர்மாணித்தல்.
2. அதிவேகப் பாதைகளை நிர்மாணித்தல்.
3. பாலங்களை நிர்மாணித்தல்.
4. மேலும் பாதைகளை அமைத்தல்.

agaram.lk

13. வணிகத்தின் நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பு மற்றும் வேலைப்பகிர்வு என்பவற்றைக் குறிப்பிடுவது,
1. கட்டுப்படுத்தல்
2. செயற்படுத்தல்
3. ஒழுங்கமைத்தல்
4. திட்டமிடல்

14. நுகர்வோர் ஒருவர் உற்பத்திப் பொருள் ஒன்றைக் கொள்வனவு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய பிரதான காரணி ஒன்று,
1. அளவு
2. வடிவம்
3. விலை
4. பண்டக்குறி

15. சந்தைப்படுத்தல் கலவை ஒன்றில் ஒழுங்குமுறையாக உள்ளடக்கப்பட்டுள்ள விடை ஆவது,
1. மேம்படுத்தல், விலை, இடம், உற்பத்தி
2. இடம், விலை, மேம்படுத்தல், உற்பத்தி
3. உற்பத்தி, விலை, இடம், மேம்படுத்தல்
4. விலை, இடம், மேம்படுத்தல், உற்பத்தி

16. தற்காலத்தில் பயன்படுத்தப்படும் மின்னணு பண அட்டைகள் இரண்டைக் குறிப்பிடுக.
1. கடனட்டை, தன்னியக்க ரெலர் அட்டை
2. வரவட்டை, தன்னியக்க ரெலர் அட்டை
3. கடனட்டை, வரவட்டை
4. கடனட்டை, கணக்கட்டை

17. கணக்கீட்டின் பிரதான நோக்கமாக அமைவது,
1. வணிகத்தில் போதுமான இலாபம் ஈட்டப்பட்டுள்ளதா என அறிதல்.
2. வணிகத்தின் நிதிநிலைமை போதுமானதா என அறிதல்.
3. சட்டத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.
4. வெளிவாரிக் கட்சியினருக்கு தீர்மானம் எடுப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்குதல்.

18. வணிகத்தில் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் உரிமை முறையே ரூ.200000, ரூ.80000, ரூ.120000 ஆகும். கீழ்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றுள்ளன.
1) ரூ.8000 கிரயமான பண்டங்கள் ரூ. 15000 இற்கு கடனுக்கு விற்கப்பட்டன.
2) கடன்கொடுத்தோருக்கு ரூ. 20000 செலுத்தப்பட்டது.
3) ரூ.3000 வட்டி அடங்கலாக ரூ.12000 வங்கிக்கடன் தவணை காசாகச் செலுத்தப்பட்டது.

மேற்படி கொடுக்கல் வாங்கல்களின் பின்னர் மீதிகளாக அமைவது,

| | சொத்துக்கள் | உரிமை | பொறுப்புக்கள் |
|---|---|---|---|
| 1. | -25000 | +4000 | +29000 |
| 2. | 175000 | 124000 | 51000 |
| 3. | 175000 | 127000 | 48000 |
| 4. | 175000 | 131000 | 44000 |

- கீழ்வரும் தகவல்கள் வினா இல. 19 மற்றும் 20 இற்கானது.

A - அட்டுறு மின்சாரக் கட்டணம்
B - கடன்பட்டோர்
C - கடன்கொடுத்தோர்
D - விற்பனை
E - இயந்திரம்
F - வங்கிமேலதிகப்பற்று
G - காப்புறுதி
H - வங்கிக்கடன்வட்டி
I - வங்கிக் கடன்
J - மூலதனம்
K - தளபாடம்
L - முதலீடுகள்

19. சொத்துக்களை மட்டும் உள்ளடக்கியுள்ள எழுத்துக்கூட்டம்,
1. BEKL
2. BDEG
3. EGNK
4. CJKL

20. பொறுப்புக்களை மட்டும் உள்ளடக்கியுள்ள எழுத்துக் கூட்டம்,
1. ABFI
2. CFNI
3. ACFI
4. FHIJ

21. மூல ஏடுகளாகவும் பேரேடாகவும் தொழிற்படும் ஏடு,
1. காசுக்கணக்கு
2. வங்கிக்கணக்கு
3. சில்லறைக்கணக்கு
4. மேற்கூறிய யாவும்

22. கழிவுகளின் இரு பிரிவுகளாக அமைவது,
1. கொடுத்த கழிவு, பெற்ற கழிவு
2. காசு கழிவு, வியாபார கழிவு
3. கொடுத்த கழிவு, வியாபார கழிவு
4. பெற்ற கழிவு, காசுக்கழிவு

23. சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் உரிமை ஆகிய மூன்றும் குறைவடைவதற்கு காரணமாய் அமையும் கொடுக்கல் வாங்கலானது,
1. உரிமையாளர் ரூ.2000 காசினையும், ரூ.5000 பெறுமதியான பொருட்களையும் தனிப்பட்ட தேவைக்கென எடுத்துச் சென்றார்.
2. ரூ.3000 வட்டி அடங்கலாக ரூ.12000 வங்கிக்கடன் தவணைக் கட்டணம் காசாகச் செலுத்தப்பட்டது.
3. ரூ.12000 கிரயமான பொருட்கள் ரூ.10000 இற்கு காசுக்கு விற்கப்பட்டது.
4. வணிகத்தின் காசு ரூ.10000 உம், சொந்தக்காசு ரூ.5000 இனையும் வணிகத்தின் மின்சாரப்பட்டியலுக்கு செலுத்தப்பட்டது.

- கீழ்வரும் கொடுக்கல் வாங்கல்களை அடிப்படையாகக் கொண்டு இல.24, இல.25 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்குக.

ரூ. 18000 கடன்விற்பனையின் போது 10% வியாபாரக்கழிவும், காசு பெறப்படும் போது 5% காசுக்கழிவும் குறைக்கப்பட்டது.

24. மேற்படி கொடுக்கல் வாங்கலில் வியாபாரக்கழிவு மற்றும் காசுக்கழிவு என்பன முறையே,
1. ரூ.1800, ரூ.810
2. ரூ.1800, ரூ.1620
3. ரூ.1620, ரூ.1800
4. ரூ.810, 1800

25. குறித்த கடன் செலுத்தப்படும்போது கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய முழுத்தொகை எவ்வளவு?
1. ரூ.16200
2. ரூ.17190
3. ரூ.15390
4. ரூ.2610

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

- கீழ்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வினா 26 மற்றும் வினா 27 ஆகியவற்றிற்கு விடையளிக்குக.

"ஜனவரி மாத ஆரம்பத்தில் சில்லறைக் காசாளரிடம் ரூ.8000 வழங்கப்பட்டது. ஜனவரி மாத முடிவு தினத்தில் சில்லறைக் காசாளரிடம் ரூ.4000 மீதமாகக் காணப்பட்டது."

26. ஜனவரி மாத இறுதித் தினத்தில் மீள நிரப்பப்பட வேண்டிய சில்லறைக் காசுத்தொகையாக அமைவது,
1. ரூ.8000 2. ரூ.12000 3. ரூ.4000 4. ரூ.10000

27. பெப்ரவரி மாதத்தில் பிரயாணச்செலவு அதிகரித்தமையால் சில்லறைச் செலவு ஜனவரி மாதத்தினை விட 15% ஆல் உயர்வடைந்துள்ளது. பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி சில்லறை காசாளரிடம் காணப்பட்ட மீதியும், மீள் நிரப்பப்பட்ட தொகையும் முறையே அமைவது,
1. ரூ.3600, ரூ.3400
2. ரூ.3600, ரூ.8600
3. ரூ.4600, ரூ.3400
4. ரூ.3400, ரூ.4600

28. கணக்குகளில் காட்டப்படாத கழிவாக அமைவது,
1. காசுக்கழிவு
2. பெற்றகழிவு
3. வியாபாரக்கழிவு
4. கொடுத்தகழிவு

29. வணிகத்தில் 2016.03.31 ஆம் திகதியில் செம்மையாக்கிய வங்கிக் கணக்கின் மீதியை விட, வங்கிக் கூற்றின் மீதி ரூ.1600 ஆல் அதிகமாகக் காணப்பட்டது. இவ்வகை வித்தியாசத்திற்கான காரணமாக அமைவது,
1. வைப்பிலிடப்பட்டும் தீர்வையாகாத காசோலை ரூ.1600.
2. கடன்பட்டோர் நேரடியாக வங்கிக்கு செலுத்திய காசு ரூ.1600.
3. செலுத்தப்பட்டு காசாக மாற்றப்பட்ட காசோலைகள் ரூ.1600.
4. மாற்றப்படாத காசோலைகள் ரூ.1600.

30. சுமித் நிறுவனத்திடம் கடனாகப் பெறப்பட்ட ரூ.4000 பெறுமதியான இயந்திரம் அந்நிறுவனத்தின் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டமையால் உருவாகிய தொங்கல் கணக்கின் மீதி வருமாறு,
1. ரூ.4000 வரவு
2. ரூ.8000 செலவு
3. ரூ.4000 செலவு
4. ரூ.8000 வரவு

31. வணிகத்தில் காணப்படும் தேறியலாபமானது,
1. மொத்தவருமானம் மற்றும் மொத்தச் செலவுகளுக்கிடையிலான வித்தியாசமாகும்.
2. விற்பனை மற்றும் விற்பனைக் கிரயங்களுக்கிடையிலான வித்தியாசமாகும்.
3. விற்பனை மற்றும் கொள்வனவுகளுக்கிடையிலான வித்தியாசமாகும்.
4. வருமானம் மற்றும் கிரயங்களுக்கிடையிலான வித்தியாசமாகும்.

- கீழ்வரும் செலவுகளை அடிப்படையாகக் கொண்டு 32 - 33 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்குக.

A - வங்கிக்கட்டணம்
B - சம்பளமும் கூலியும்
C - காப்புறுதிக்கட்டணம்
D - மின்சாரக்கட்டணம்
E - கொடுத்தகழிவு
F - பெற்றகழிவு
G - அறவிடமுடியாக்கடன்
H - போக்குவரத்துக்கட்டணம்

32. நிருவாகச் செலவுகளை மட்டும் உள்ளடக்கிய தொகுதி,
1. A,B,C 2. A,C,B 3. B,C,D 4. A,C,F

33. விற்பனை விநியோகச் செலவுகளை மட்டும் உள்ளடக்கிய தொகுதி
1. E,G,H 2. E,F,G 3. F,G,H 4. A,E,H

34. இயந்திரக்கிரயம் ரூ.200000, இயந்திரத்தின் இழிவுப் பெறுமதி ரூ.20000, வருடாந்த பெறுமானத்தேய்வு ரூ.30000. இந்த இயந்திரத்தின் பயன்படு பொருளியல் காலம் எவ்வளவு?
1. 10 வருடங்கள்
2. 5 வருடங்கள்
3. 6 வருடங்கள்
4. 6 வருடம் 8 மாதம்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

35. மாதம் ரூ.2000 படி வியாபாரக் கட்டிடத்தின் ஒரு பகுதி வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது. கணக்கீட்டுக் காலப்பகுதியில் கட்டிடவாடகை வருமானமாக ரூ.20000 பெறப்பட்டுள்ளது. பெறவேண்டிய வாடகை வருமானம் தொடர்பான கணக்குப் பதிவு வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. காசுக் கணக்கு வரவு | 20000 | |
| கட்டிடவாடகை வருமானக் கணக்கு செலவு | | 20000 |
| 2. காசுக் கணக்கு வரவு | 4000 | |
| கட்டிடவாடகை வருமானக் கணக்கு செலவு | | 4000 |
| 3. பெறவேண்டிய கட்டிடவாடகை வருமானக் கணக்கு வரவு | 4000 | |
| கட்டிடவாடகை வருமானக் கணக்கு செலவு | | 4000 |
| 4. பெறவேண்டிய கட்டிட வாடகை வருமானக் கணக்கு வரவு | 24000 | |
| கட்டிடவாடகை வருமானக் கணக்கு செலவு | | 24000 |

36. அட்டுறு எண்ணக்கரு குறிப்பிடுவது,

1. பெறப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட அனைத்து பெறுமதிகள் தொடர்பாகவும் கவனத்தில் கொள்ளல்.
2. பெறப்பட்ட மற்றும் பெறவேண்டிய செவுகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளல்.
3. செலுத்தப்பட்ட மற்றும் செலுத்தவேண்டிய செலவுகள் தொடர்பாகக் கவனத்தில் கொள்ளல்.
4. காலப்பகுதிக்கான வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளல்.

- கீழ்வரும் தகவல்களைப் பயன்படுத்தி வினா இலக்கம் 37 முதல் 40 வரையான வினாக்களுக்கு விடைதருக.

வணிகமொன்றில் 2016.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த கீழ்வரும் கணக்கு மீதிகள் தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 2016.01.01 இல் இருப்பு | ரூ.27000 |
| கொள்வனவு | ரூ.135000 |
| உளச்சுமை கூலி | ரூ.4000 |
| பெற்றகழிவு | ரூ.6000 |
| வங்கிக்கடன் | ரூ.5000 |
| விற்பனை | ரூ.210000 |
| வெளிச்சுமைக் கூலி | ரூ.3000 |
| மின்சாரம் | ரூ.5000 |
| கொடுத்தகழிவு | ரூ.1000 |
| விளம்பரம் | ரூ.2500 |
| இறைவரி (3 மாதத்திற்கு) | ரூ.500 |
| 2016.12.31 ஆம் திகதியில் இருப்பு | ரூ.18000 |

37. இவ்வணிகத்தில் விற்பனைக் கிரயமானது,
1. ரூ.140000 2. ரூ.148000 3. ரூ.166000 4. ரூ.151000

38. இவ்வணிகத்தில் மொத்த இலாபமானது,
1. ரூ.62000 2. ரூ.70000 3. ரூ.44000 4. ரூ.59000

39. 2016.12.31 ஆம் திகதியில் வருட இறுதித் தேறியலாபம்,
1. ரூ.49500 2. ரூ.48500 3. ரூ.54500 4. ரூ.50000

40. இந்த வணிகத்தின் தேறியலாபக் கணிப்பீட்டிற்கு இணங்க செலவுகளின் தொகையாக அமைவது,
1. ரூ.18500 2. ரூ.19500 3. ரூ.13500 4. ரூ.12000

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - කොළඹ අධ්‍යාපන කලාපය
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம் - கொழும்பு கல்வி வலயம்
Western Provincial Education Department - Colombo Educational Zone

දෙවන වාර ඇගයීම - 2018
இரண்டாம் தவணை மதிப்பீடு - 2018
Second Term Evaluation - 2018

| | | |
|---|---|---|
| 11 ශ්‍රේණිය<br>தரம் 11<br>Grade 11 | ව්‍යාපාර සහ ගිණුම් අධ්‍යයන II පත්‍රය<br>வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் வினாத்தாள்-II<br>Business & Accounting Studies Paper II | පැය දෙකයි<br>இரண்டு மணித்தியாலங்கள்<br>Two Hours |

முதலாம் வினா உட்பட “அ” பகுதியில் இருந்து இரண்டு வினாக்களையும், “ஆ” பகுதியில் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

**01.** ஹிமாலி அழகுக்கலை தொடர்பான பட்டப்படிப்பை முடித்த ஒருவராவார். அவரது அம்மாவினால் உற்சவங்கள் நடாத்தப்படும் மண்டபம் அமைந்துள்ள பிரதேசமொன்றில் நடாத்திச் செல்லப்பட்ட “ரூ சிறி சலூன்” என்ற பெயரில் அழகுக்கலை நிலையமொன்று 2018.01.01 ஆம் திகதியில் இருந்து பயிற்சி பெற்ற உதவியாளர் ஒருவருடனும் மற்றும் கீழ்வரும் சொத்துக்கள் பொறுப்புக்கள் உள்ளடங்கலாக ஹிமாலிக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| கட்டிடங்கள் | ரூ.150 000 |
| அலங்கார உபகரணங்கள் | ரூ.120 000 |
| கடன்பட்டோர் | ரூ.25 000 |
| கடன்கொடுத்தோர் | ரூ.50 000 |
| வங்கி மீதி | ரூ.200 000 |
| கையில் காசு | ரூ.75 000 |

2018 ஜனவரி மாதத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன.

| | |
|---|---|
| 2018.01.02 | கடன்பட்டோரிடம் பெற்ற காசு ரூ.15000 |
| 2018.01.03 | பெற்ற வங்கிக்கடன் ரூ.200000 |
| 2018.01.08 | அலங்கார உபகரணங்கள் காசுக்கு வாங்கியது ரூ.150000 |
| 2018.01.08 | கொண்டு வரும் கூலி ரூ.7500 |
| 2018.01.12 | ஹிமாலி தனது சொந்தத் தேவைக்கென எடுத்துச் சென்ற காசு ரூ.10000 |
| 2018.01.15 | சேவை வழங்கியதன் மூலம் பெற்ற வருமானம் ரூ.75000 |
| 2018.01.20 | மின்சாரக்கட்டணம் செலுத்தியது ரூ.8500 |
| 2018.01.23 | கடன்கொடுத்தோருக்கு கொடுத்த காசோலை ரூ.10000 |
| 2018.01.24 | செலுத்திய தொலைப்பேசிக் கட்டணம் ரூ.4500 |
| 2018.01.25 | ஊழியர் சம்பளம் செலுத்தியது ரூ.15000 |

- உபகரணங்களுக்கான வருடாந்த பெறுமானத்தேய்வு 10%

1) நோக்கம் மற்றும் உரிமை அடிப்படையில் இவ்வணிகம் எந்த வணிக வகைக்குள் உள்ளடங்கும் என்பதைக் குறிப்பிடுக.

2) (அ) இவ்வணிகத்தை பதிவு செய்ய ஹிமாலி விரும்புகின்றார். அவ்வாறாயின் அவர் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களைப் பட்டியலிடுக.

(ஆ) நிறுவனம் ஒன்றைப் பதிவு செய்வதனால் கிடைக்கும் நன்மைகள் யாவை?

3) “ரூ சிறி சலூன்” நிறுவனத்திடம் காணப்படும் இரு பலங்கள் யாவை?

4) அழகுக்கலை சேவைக்கு மேலதிகமாக இவ்வணிகத்தினால் உருவாக்கப்படக்கூடிய வேறு வணிகச் சந்தர்ப்பங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

5) இந்த நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்குரிய இரு மூல ஏடுகளைப் பெயரிட்டு, அதற்கு பொருத்தமான மூல ஆவணத்தையும் குறிப்பிடுக.

6) வங்கி நடைமுறைக் கணக்கொன்றை வைத்திருப்பதனால் ஹிமாலிக்குக் கிடைக்கும் இரு நன்மைகள் யாவை?

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

7) 2018.01.01 ஆம் திகதிக்கு இவ்வணிகத்தின் ஆரம்ப மூலதனத்தையும், 2018.01.31 ஆம் திகதியில் இறுதி மூலதனத்தையும் கணிப்பிடுக.

8) (அ) இந்த வணிகத்தில் ஏற்படும் செலவுகளைத் தவிர வணிகத்தின் உரிமை குறைவடைவதற்கு காரணமாக அமையும் கொடுக்கல் வாங்கல் ஒன்றைக் குறிப்பிடுக.

(ஆ) உபகரண பெறுமானத் தேய்வினை பதிவிடுவதற்கான இரட்டைப் பதிவினை பெறுமதிகளுடன் குறிப்பிடுக.

9) 2018.01.31 ஆம் திகதிக்கு வணிகத்தின் காசு மீதியைக் கணிப்பிடுக.

10) 2018.01.31 ஆம் திகதிக்கு வணிகத்தின் கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் மீதிகளைக் குறிப்பிடுக.

(10×2=20 புள்ளிகள்)

**பகுதி "அ"- வணிகக்கல்வி**

இரு வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

**02.** (i) (அ) உற்பத்தி அடிப்படையில் வணிகத்தின் இரு வகைகளைக் குறிப்பிடுக.

(ஆ) பொருட்கள் மற்றும் சேவைகள் இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளைத் தருக.

(2 புள்ளிகள்)

(ii) கீழ்வரும் கூற்றுக்கள் சரியா அல்லது பிழையா எனக்குறிப்பிடுக.

(அ) தற்காலத்தில் வணிகத்தில் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுவது இலத்திரனியல் வணிக முறையின் ஊடாக மட்டுமே ஆகும். ( )

(ஆ) நுகர்வோரைத் திருப்திப்படுத்துவது வணிகத்தின் நோக்கமன்று. ( )

(இ) வணிகத்தில் ஈடுபடுத்தப்படும் உடல், உள பங்களிப்பு உழைப்பின் இரு வகைகளாகும். ( )

(ஈ) வணிகத்தின் அகச்சூழலை கற்கும்போது பலம் மற்றும் பலவீனத்தை அறிய முடிகின்றது. ( )

(2 புள்ளிகள்)

(iii) (அ) வணிகத்தை நடாத்திச் செல்லும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய சட்டச் சூழல் என்பதை விளக்குக.

(ஆ) அரசின் மூலமாக வணிகத்திற்கு வழங்கப்படும் சலுகைகள் 2 குறிப்பிடுக. (2புள்ளிகள்)

(iv) (அ) வணிகமொன்றின் குறிக்கோள்கள் எவை?

(ஆ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரத்தில் காணக்கூடிய இரு பண்புகளும் யாவை?

(2 புள்ளிகள்)

(4×2=8 புள்ளிகள்)

**03.** (i) (அ) வியாபார துணைச்சேவைகள் என்றால் என்ன?

(ஆ) வணிக வங்கி என்றால் என்ன? (2 புள்ளிகள்)

(ii) கீழ்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் குறிப்பிடுக.

(அ) மாணவன் ஒருவன் பகலுணவை பாடசாலை சிற்றூண்டிச் சாலையில் இருந்துபெற்றுக் கொள்ளல் சில்லறை வியாபாரம் ஆகும். ( )

(ஆ) காசோலையில் பெயர் குறிப்பிடப்படும் நபர் காசோலையைப் பெறுபவர் என இனங்காணப்படுவார். ( )

(இ) வைப்புக்காலம் மற்றும் வைப்புப்பெறுமதி என்பனவற்றிற்கு ஏற்ப நிலையான வைப்புக்களுகான வட்டி வீதம் மாற்றமடையும். ( )

(ஈ) சர்வதேச வணிகத்திற்கு கடல் வழிப்போக்குவரத்து இன்றியமையாததாகும். ( )

(2 புள்ளிகள்)

(iii) இலத்திரனியல் பணக்கொடுக்கல் வாங்கல்களினால் ஏற்படும் 3 நன்மைகள் தருக. (2 புள்ளிகள்)

(iv) தொடர்பாடல் செயன்முறைக்கான பாய்ச்சல் கோட்டுப்படத்தை வரைக. (2 புள்ளிகள்)

(4×2=8 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

**04.** (i) (அ) முகாமைத்துவம் என்பது யாது?

(ஆ) திட்டமிடலின் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய 2 காரணிகள் யாவை? (2 புள்ளிகள்)

(ii) கீழ்வரும் கூற்றுக்கள் உண்மையா அல்லது பொய்யா எனக் குறிப்பிடுக.

(அ) பொதுக்கம்பனிகள் பங்கு வெளியீட்டின் மூலம் தமக்கான மூலதனத்தை திரட்டிக்கொள்ளலாம். (     )

(ஆ) இலங்கையின் தைத்த ஆடைகள் ஐரோப்பிய நாடுகளில் விற்பனை செய்யப்படுவது ஏற்றுமதி வியாபாரமாகும். (     )

(இ) ஆயுள் காப்புறுதியில் காப்புறுதி ஒப்பந்தமொன்றின் பெறுமதி நபரின் விருப்பம் மற்றும் கட்டணம் செலுத்தக் கூடிய தகுதி அடிப்படையில் தீர்மானிக்கப்படும். (     )

(ஈ) வணிக திட்டமிடல் நடைபெறுகின்றதா என்பதனை அவதானித்தல் கட்டுப்படுத்தல் எனப்படும். (     )

(2 புள்ளிகள்)

(iii) பாடசாலை புத்தகப் பைகளை உற்பத்தி செய்யும் நிறுவனமொன்று தனது உற்பத்திகளை பாடசாலை மாணவர்களுக்கு விசேட விலைக்கழிவு ஒன்றில் வழங்குவதுடன் அவர்களுக்கு பொருத்தமான முறையில் வடிவம், அளவு என்பவற்றையும் கருத்தில் கொண்டு வழங்குகின்றது. இவ்வணிகத்தில் கூறப்படும் சந்தைப்படுத்தல் கலவைகள் இரண்டு தருக.

(2 புள்ளிகள்)

(iv) "இலக்குச் சந்தை" என்றால் என்ன? (2 புள்ளிகள்)

(4×2=8 புள்ளிகள்)

## பகுதி "ஆ" - கணக்கீடு

இரு வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

**05.** (i) (அ) மூல ஆவணங்கள் இரண்டினையும் அவற்றிற்கான மூல ஏடுகளையும் எழுதுக.

(ஆ) கணக்கீட்டுத் தகவல்களில் அக்கறையுடைய இரு தரப்பினரைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

(ii) சேகர் வியாபாரத்தில் 2017 ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற விற்பனை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு,

| திகதி | பட்டியல் | வாடிக்கையாளர் | பெறுமதி | வியாபாரக்கழிவு |
|---|---|---|---|---|
| 2017.01.05 | 03 | ரஞ்சித் | 12000 | 10% |
| 2017.01.22 | 04 | மகேஷ் | 10000 | 5% |
| 2017.01.28 | 05 | தரங்கா | 5000 | - |

மேற்படி தகவல்களைக் கொண்டு விற்பனை நாளேட்டினைத் தயாரிக்குக.

(2 புள்ளிகள்)

(iii) கீழ்வரும் கணக்கீட்டுச் சமன்பாட்டில் காணப்படும் கொடுக்கல் வாங்கல் விபரங்களை பெறுமதிகளுடன் எழுதுக.

| | காசு + | கடன் பட்டோர் + | இருப்பு + | நடைமுறை அல்லா சொத்து = | வங்கிக் கடன் + | கடன் கொடுத்தோர் + | மூலதனம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | | | + 8000 | | | + 8000 | |
| 2. | + 5000 | | | | + 5000 | | |
| 3. | | + 15000 | - 10000 | | | | + 5000 |
| 4. | | | | + 20000 | | + 20000 | |
| 5. | + 10000 | - 10000 | | | | | |
| 6. | - 3000 | | + 3000 | | | | |
| 7. | - 10000 | | | | | - 10000 | |
| 8. | - 4000 | | | | | | - 4000 |

குறிப்பு: உரிமையாளர் பற்றுக்கள் இல்லை. (4 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

(iv) தாரக வணிக நிறுவனத்தின் 2018.03.31 ஆம் திகதி வங்கிக் கணக்கின் படி மீதி ரூ.32000. இது வங்கிக் கூற்றின் மீதியுடன் பின்வரும் காரணங்களால் வேறுபட்டுக் காணப்பட்டது.

(1) வைப்பிலிட்டு இதுவரையில் வசூலிக்கப்படாத காசோலைகள் ரூ.7000

(2) வழங்கப்பட்டு இதுவரையில் வங்கியில் மாற்றப்படாத காசோலை ரூ.3500

(3) நிலையான கட்டளையின் பேரில் வங்கியால் செலுத்தப்பட்ட காப்புறுதிக் கட்டணம் ரூ.2000 வங்கிக் கணக்கில் பதியப்படவில்லை.

(4) வங்கி அறவிட்ட வங்கிக் கட்டணம் ரூ.1500

(5) வங்கி நேரடியாக பெற்று கணக்குடன் சேர்த்துக்கொண்ட பங்குலாபம் ரூ.4000 நிறுவன வங்கிக் கணக்கில் பதியப்படவில்லை.

வேண்டப்படுவது,

(அ) திருத்தப்பட்ட வங்கிக்கணக்கு (ஆ) வங்கிக் கணக்கிணக்கக்கூற்று

(4 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

**06.** (i) (அ) மீள்நிரப்பு சில்லறைக்காசு வசக்கட்டு என்பதினால் கருதப்படுவது யாது?

(ஆ) தொங்கல் கணக்கு என்றால் என்ன? (2 புள்ளிகள்)

(ii) மிஹிரி வணிகத்தின் 2018 ஜனவரி மாதத்திற்கான கீழ்வரும் தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

2018.01.01 இல் மூலதனம் ரூ.136000

2018 ஜனவரி மாதத்திற்கான செலவினங்கள் ரூ.50400

2018 ஜனவரி மாதத்திற்கான வருமானங்கள் ரூ.35000

2018.01.15 அன்று உரிமையாளர் இட்டமேலதிக மூலதனம் ரூ.10000

- 2018.01.31 அன்று மூலதனத்தினைக் கணிப்பிடுக. (2 புள்ளிகள்)

(iii) கித்சிறி வணிக நிலையத்தில் 2018.03.31 அன்று தயாரிக்கப்பட்ட பரீட்சைமீதியின் செலவுப் பக்கத்திலும் பார்க்க வரவுப்பக்கத்தில் ரூ.2000 அதிகமாக உள்ளது. பரிசீலனையின் போது கீழ்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

(1) ரூ.3000 விற்பனைப் பட்டியல் ஒன்று விற்பனை நாளேட்டில் பதியப்படவில்லை.

(2) கடன்கொடுத்தோருக்கு செலுத்திய ரூ.2500 கடன்கொடுத்தோர் கணக்கல் பதியப்படவில்லை.

(3) சில்லறை வருமானங்கள் கணக்கின் மீதி ரூ.1800 தவறுதலாக பரீட்சை மீதியின் வரவு நிரலில் பதியப்பட்டுள்ளது.

(4) கொள்வனவுப் பட்டியல் ரூ.3200 பேரேட்டுக் கணக்குகளில் இருமுறை பதியப்பட்டுள்ளது.

(5) கடன்பட்டோரான ரத்னாவின் ரூ.3400 மீதியானது பரீட்சை மீதியில் ரூ.4300 எனப் பதியப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது,

(அ) மேற்படி பிழைகளைத் திருத்துவதற்கான பொதுநாட்குறிப்பு பதிவுகள்.

(ஆ) தொங்கல் கணக்கு என்பவற்றைத் தயாரிக்குக.

(4புள்ளிகள்)

(iv) சம்பத் வணிகத்தின் சில்லறைக் காசாளனால் ரூ.3000 காசு பிரதம காசாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. வணிகத்தில் இடம்பெற்ற சில்லறைக் காசுக் கொடுப்பனவு விபரங்கள் வருமாறு.

| திகதி | கைச்சாத்து இல. | விபரம் | பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|
| 01.05 | 01 | முச்சக்கரவண்டி கூலி | 100 |
| 01.12 | 02 | முத்திரை | 60 |
| 01.12 | 03 | போக்குவரத்து செலவு | 50 |
| 01.16 | 04 | அன்பளிப்பு | 200 |
| 01.20 | 05 | அலுவலக தளபாடம் வாங்கியது | 2000 |
| 01.22 | 06 | பதிவுத்தபால் கட்டணம் | 80 |
| 01.25 | 07 | மெழுகுவர்த்தி வாங்கியது | 1000 |

வேண்டப்படுவது,

- தபால், போக்குவரத்துசெலவு, சில்லறைச் செலவுகள், பேரேட்டுக்கணக்கு பகுப்பாய்வு நிரல்கள் உள்ளடங்களாக சில்லறைக் காசேட்டினைத் தயார்செய்க. (4 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

**07.** (i) (அ) தொலைபேசி மூலமான (வுநடந டயமெைபெ) வங்கிச் சேவையின் இரு அனுகூலங்களைத் தருக.

(ஆ) பொது நாட்குறிப்பில் பதிவு செய்யப்படும் கொடுக்கல் வாங்கல்கள் 2 தருக.

(2 புள்ளிகள்)

(ii) இயந்திரத்தின் கொள்வனவு விலை ரூ.180000. பொருத்தும் கூலி ரூ.50000 ஏற்பட்டது. இவ் இயந்திரத்தின் பயன்படு ஆயுட்காலம் 5 வருடங்களாகும். 5 வருட பயன்பாட்டின் முடிவில் இயந்திரமானது ரூ.30000 இற்கு விற்கப்பட முடியும்.

(அ) இயந்திரத்தின் கிரயப் பெறுமதி யாது?

(ஆ) இயந்திரத்திற்கான வருடாந்த பெறுமானத்தேய்வினைக் கணிப்பிடுக.

(2 புள்ளிகள்)

(iii) சுரனிமல வியாபாரத்தின் ஏடுகளில் இருந்து 2017.12.31 ஆம் திகதி பிரித்தெடுக்கப்பட்ட பரீட்சை மீதி வருமாறு,

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| கொள்வனவு / விற்பனை | 265000 | 402600 |
| உள்கொண்டுவரும் கூலி | 12000 | |
| சம்பளம் | 9000 | |
| கழிவுகள் | 700 | 1500 |
| விளம்பரம் | 4000 | |
| 2017.01.01 இல் சரக்கிருப்பு | 42000 | |
| பெற்றவாடகை | | 4500 |
| மின்சாரக் கட்டணம் | 1600 | |
| 10% வங்கிக்கடன் | | 100000 |
| தளபாடம் பொருத்திகள் (கிரயம்) | 100000 | |
| மோட்டார் வாகனம் (கிரயம்) | 600000 | |
| வங்கிக்கட்டணம் | 1000 | |
| எழுதுகருவிச் செலவுகள் | 1600 | |
| கடன்பட்டோர் | 20000 | |
| அறவிடமுடியாக்கடன் | 1200 | |
| தளபாடப்பெறுமானத்தேய்வு ஏற்பாடு (01.01.2017) | | 40000 |
| மூலதனம் | | 509500 |
| மொத்தம் | 1058100 | 1058100 |

மேலதிகத் தகவல்கள்,

(1) 2017.12.31 ஆம் திகதியில் இருப்புக்களின் பெறுமதி ரூ.30000

(2) செலுத்த வேண்டிய மின்சாரக் கட்டணம் ரூ.400

(3) தளபாடம் பொருத்திகள் மற்றும் மோட்டார் வாகனங்களுக்கு கிரயத்தில் ஆண்டுக்கு 10% பெறுமானத் தேய்விடப்படும்.

(4) கடன்பட்டோரில் ரூ.2000 அறவிடமுடியாக்கடனாகப் பதிவழிக்கப்படும்.

வேண்டப்படுவது,

- 2017.12.31 ஆம் திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக் கூற்று.

(8புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!